Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி - 08 | 24-07-2003 | வியாழக்கிழமை | ஓசை 156




# செல்லக்கிளி அம்மான் தூபி திரைநீக்க நிகழ்வில்

# இராணுவத்தின் இடையூறால் எழுந்த பதற்றம்!

## கண்காணிப்புக்குழுத் தலையீட்டால் தணிந்தது

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபாற் கட்டைச் சந்தியில் நேற்று லெப். செல்லக்கிளி அம்மானின் தூபியைத் திரை நீக்கம் செய்ய முற்பட்ட மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடும் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து நேற்று மாலை 1.00 மணி முதல் 3.00 மணி வரை அப்பகுதியில் நிலவிய பதற்றநிலை கண்காணிப்புக்குழுவினரின் வருகையையடுத்து தணிந்தது. பின்னர் தூபியும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த உறுப்பினரான வீரச்சாவடைந்த லெப். செல்லக்கிளி அம்மானின் 20ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இப்பகுதியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நினைவுத்தூபி ஒன்றை நேற்று திறந்து வைப்பதற்காக மக்கள் அவ்விடத்தில் ஒன்றுகூடியபோது அச்செழு பிரிகேட் படைத்தளப் பிரிகேடியர் உட்பட நூற்றுக்கணக்கான படையினர் மக்களை இப்பணிகளைச் செய்யவிடாது தடுத்து தகராறு புரிந்தனர். மீறினால் சுட்டுத் தள்ளுவோம் எனவும் அச்சுறுத்தினார்கள். இவர்கள் கலகமடக்கும் கேடயங்கள், ஒலிபெருக்கிகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் போன்றவற்றைக் காட்டி மிரட்டினார்கள். இவற்றுக்குப் பயப்படாத மக்கள் தொடர்ந்தும் தமது பணிகளில் ஈடுபட்டதால் அப்பகுதிக்கு மேலும் பல படையினர் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு வரவழைக்கப்

(08ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி கிழக்கில் படையினர் உசார் நிலையில்

திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் படையினர் என்றுமில்லாதவாறு நேற்று உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். திருநெல்வேலி கிழக்குப் பகுதியிலுள்ள வாலையம்மன் ஆலயப் பகுதியில் படையினர் பற்றைகள் மற்றும் மதவுகளில் பதுங்கியிருந்ததுடன் நூற்றுக்கணக்கான படையினர் பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டி

(08ம் பக்கம் பார்க்க)

## மாதகல், இளவாலைப் பகுதிகளில் புதிது புதிதாக முட்கம்பி வேலிகள்

### - காலை,மாலை ரோந்து நடவடிக்கை

யாழ். மாதகல்,இளவாலைப் பகுதிகளில் புதிது புதிதாக முட்கம்பி வேலிகளையும், காவலரண்களையும் படையினர் அமைத்து வருவதுடன், கடந்த சில தினங்களாக கடற்படையினர் குழுக்கள் குழுக்களாகப் பிரிந்து காலை மாலை இரு வேளை களிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் படையினர் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் உபகரணங்களையும் கடும் சோதனை இடுகின்றார்கள். இந்த நடவடிக்கைகளில் 40முதல் 50 வரையான

(08ம் பக்கம் பார்க்க)

## லெப்.செல்லக்கிளியம்மானுக்கு திருநெல்வேலியில் தூபி திறப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான லெப்.செல்லக்கிளி அம்மானின் நினைவுத்தூபி நேற்று யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பகுதியில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 13 இராணுவத்தினர் பலியான தாக்குதலில் வீரச்சாவடைந்த லெப்.செல்லக்கிளி அம்மானுக்கு தாக்குதல் நடத்தப்பட்ட அந்த இடத்திலேயே இந்த நினைவுத்தூபி திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதை யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சாள்ஸ் திரைநீக்கம் செய்து வைத்துள்ளார். யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் கவியன்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கிராமசேவகர்

(08ம் பக்கம் பார்க்க)

### - வடமராட்சி மீனவர்கள் -

## இராணுவ துன்புறுத்தல்களைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு!

(யாழ்ப்பாணம்)

இராணுவ துன்புறுத்தல்களைக் கண்டித்து வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசம் போர்நிறுத்தக்கண்காணிப் புக்குழுவினிடம் முறையிட்டுள்ளது. தமது படகுகள் ஏற்கனவே மீன்பிடித் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் தற்போது புதிய விண்ணப்படிவம் ஒன்றை வழங்கி அதனூடாகத் தம்மிடம்பதிவை மேற்கொள்ளுமாறும் பதியாதவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவித்துள்ளனர். இது. மீனவர்களைத் துன்புறுத்தும் நடவடிக்கையாகும். மேலும் நடுக்கடலில் திடீரென வரும் கடற்படையினர் அவ்விடத்திலேயே மீன்பிடிப் படகை நங்கூரமிடுமாறு பணித்து அங்கு சோதனை மேற்கொள்கின்றனர். மேலும் மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை வெளி இடங்களுக்குக் கொண்டுசெல்ல இராணுவம் அனுமதி மறுத்துவருகிறது.

(08ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக வெளியான யோசனைகளில் வேறுபாடுண்டு

### சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசாங்கத்தின் யோசனைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள யோசனைகளுக்குமிடையில் வேறுபாடு இருக்கிறதெனத் தெரியவந்துள்ளதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். இதன் உண்மைநிலையை அறியும் வரை நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றவிருந்த உரையை சனாதிபதி பின் போட்டுள்ளார். இடைக்கால நிர்வாக சபை பற்றி அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அனுப்பியுள்ள யோசனைகளின் அடிப்படையில் "நாட்டின் சமகால அரசியல்"என்னும் தொனிப்பொருளில் சனாதிபதி நாட்டு மக்களுக்கு நேற்று நிகழ்த்தவிருந்த உரையையே அவர் பின் போட்டுள்ளார்.

### - இடைக்கால நிர்வாகம் குறித்து -

## நோர்வேயிடமே அரசாங்கம் கருத்துக்களைத் தெரிவித்ததாம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கோ ஊடகங்களுக்குகோ யோசனைகள் அடங்கிய கடிதங்கள் எதையும் அனுப்பவில்லை என சிறிலங்கா அரசாங்கத்தின் ஊடகத்துறைப் பேச்சாளர் அலுவலக உத்தியோகத்தர் நேற்று கூறியுள்ளார். அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பிரதான மத்தியஸ்

(08ம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி.தொகுதி அமைப்பாளர் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொங்குராஎல்கத்த தேர்தல் தொகுதி அமைப்பாளரின் வீட்டின் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டினருகில் துப்பாக்கிகளுடன் வந்த ஒரு குழுவினர் முதலில் வானத்தை நோக்கிச் சுட்டுவிட்டு வீட்டின்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் வீடு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்காப் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

## நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை அரசு புதியபாதையில் இட்டுச் செல்லும்

### அமைச்சர் ஜீ.எல் பீரிஸ்

நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை புதிய பாதையில் இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்குமென அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் விடுத்த விசேட அறிக்கையில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சனநாயக அரசியல் பின்னணியை உருவாக்குவதே அரசியல் நோக்கமாகும். இத்தகைய அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதில் எதிர்க்கட்சியினருக்கு பெருமளவு பங்குஉண்டு. அரச நடவடிக்கைகளை நேரடியாகக் கண்காணிப்பதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு 14 கண்காணிப் புக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளமை முக்கிய நடவடிக்கையாகும்.

(08ம் பக்கம் பார்க்க)

### வவு. மாவட்டத்தில் இதுவரை

## புலிகள் இயக்கத்தில் இணைந்த 80 பேர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

வவுனியா மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட சிறுவர்கள் மீண்டும் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இன்று வரையும் வவுனியா

(08ம் பக்கம் பார்க்க)

## புகையிரதத்தில் மோதுண்டு கல்கிஸ்ஸயில் மூவர் பலி!

கல்கிஸ்ஸ புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தொன்றில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தின்போது மேலும் நால்வர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பாணந்துறையிலிருந்து கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்துடனேயே இவர்கள் மோதுண்டுள்ளனர். கல்கிஸ்ஸ புகையிரத நிலையத்தில் செல்ல வேண்டிய பாதைக்கான சமிக்ஞை கிடைக்காததன் காரணமாக சாரதி மாற்றுப் பாதையில்

(08ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள Pantiyam 1 Computer, Pantiyam 4 Computer, பிரிண்டருடன் OSAKI VCD PLAYER HONDA 1000kg சூக்கேஸ் இஞ்சின் விற்பனைக்குண்டு. தங்கமாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. (3566)

### தவறிவிட்டது

செல்வநாயகம் உதயகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் நிரந்தரபாசும் பணம் கட்டப்பட்ட சிட்டை என்பன 22.07.2003 ஜெயபுரத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி டிப்போ வீதியில் உள்ள மல்லிகா உணவகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (3574)

## பாக்.பிரஜை கைது

(கொழும்பு)

இலங்கையில் தடைசெய்யப்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டு மருந்தைக் கடத்திக்கொண்டு வந்த பாகிஸ்தான் குடிமகன் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

50 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் இவை பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சுங்கப் பகுதியினர் அறிவித்துள்ளார்கள்.

## சிறிலங்கா மோ.போ.திணைக்கள வரி அட்டை பெற கால அவகாசம்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வரி அட்டை பெறுவதற்காக வழங்கப்பட்டுவந்த கால அவகாசம் 2003 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் நீடிக்கப்படமாட்டாது என திணைக்களம் அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இது குறித்து கிளி.மாவட்ட மோட்டார் போககுவரத்து உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமியுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் வரி அட்டை (வட்டம்) பெறத்தவறிய இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள வாகனங்களுக்கு மோட்டார் வாகன திணைக்களம் 2003ஆம்ஆண்டு வரி அட்டையைப் பெற்றுக்கொள்ளும் படியும் அதற்கு முன்னையகாலங்களுக்கு வரி விதிவிலக்கு அளித்துள்ளதாகவும் அறிவித்திருந்தது. இதனடிப்படையில் இப்பகுதியிலுள்ள வாகன உரிமையாளர்கள் பெரும்பாலானவர்கள் 2003 வரிஅட்டையினை பெற்றுக்கொண்டுள்ளனர். பெறத்தவறியவர்கள் தற்போதும் கிளி.மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் மேற்படி வரி அட்டையினை பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலும் இதன் கால எல்லை திணைக்களத்தினால் நீடிக்கப்படுமோ அல்லது நிறுத்தப்பட்டுவிடுமோ என தன்னால் எதுவும் கூறஇயலாது எனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்று நடைபெற உள்ளது. மேற்படி இப்போட்டியானது அடுத்தமாதம் 10ம்திகதி பி.ப 2.00 மணிக்கு ஜொனி விளையாட்டுக் கழக அனுசரணையில் கலைவாணி விளையாட்டுக்கழக மாட்டுவண்டிச் சவாரித் திடலில் நடைபெற உள்ளது. அ.ஆ.இ.ஈ.பிரிவுக்காளைகள் போட்டியில் ஈடுபடவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (12)


## பாராட்டுகின்றோம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சைவநெறித் தேர்விற்குத் தோற்றி முதலாம் பரிசாக தங்கப் பதக்கத்தைப் பெற்ற

**செல்வி கல்பனா கருணாநிதி**

இரண்டாம் பரிசாக வெள்ளிப் பதக்கத்தைப் பெற்ற

**செல்வன் கயிலாயநாதன் துஷ்யந்தன்**

ஆகியோரைப் பாராட்டுவதுடன் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

கிளி/முருகானந்த ம.வி.
முரசுமோட்டை. (3576)

*அதிபர்,*
*ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.*


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### ஆறுமுகம் செல்வராசா



*எமது பணியாளர் செ.இராசலிங்கம் அவர்களின் தந்தையாரான ஆறுமுகம் செல்வராஜா 21-07-2003 அன்று அமரர் ஆகிவிட்ட செய்திகேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

பணிப்பாளர்,பொறுப்பாளர்,
பணியாளர், பராமரிப்பாளர்,
பெருந்தோட்டப் பகுதி.

(3575)


## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்

## பணிநிலை வெற்றிடம்

**01. பணிநிலை:-**

கிளைமுகாமையாளர் (ஆண்கள்)
(பயிலுனர்)

**தகைமை:-**

க.பொ.த.(சா/த) இல் ஆறு பாடங்களில் சித்தியுடன் கணிதம்/வர்த்தக கணிதம்/எண்கணிதம்/தமிழ்/சிங்களம் உட்பட 04 பாடங்களில் விசேட சித்தி.

**02. பணிநிலை:-**

இலிகிதர்
(பயிலுனர்)

**தகைமை:-**

க.பொ.த.(சா/த) இல் ஆறு பாடங்களில் சித்தியுடன் தமிழ்/சிங்களம்/வர்த்தக கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி.

**(மேற்படி சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்)**

வேண்டுகைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன் விளக்கங்கள் (சுயவிபரம்) அடங்கிய படிவத்தில் பூர்த்தி செய்து 31.07.2003ம் திகதி, வியாழக்கிழமைக்கு முன் தலைவர், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், வட்டக்கச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலிகிதர் /கிளைமுகாமையாளர் பயிலுனர் பணிநிலைக்கான விண்ணப்பம் என எழுதப்பட வேண்டும்.

*தலைவர்,*
*கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,*
*வட்டக்கச்சி.*

(சி-8438)



## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்) கிளிநொச்சி மாவட்டம்

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிவெற்றிடம்

**கிளிநொச்சி மாவட்டத்தில் நிகொட் கருத்திட்டத்தின் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்களுக்கு கீழ்வரும் தகைமைகளையுடையவர்கள் தேவைப்படுகின்றனர்.**

01. தகைமைகள் :-

I தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் (NCT)

அல்லது

II தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் (NDT) (தொழில்சார் எந்திரவியல்)

அல்லது

III தொழில்நுட்ப சேவையில் உள்ள அனுபவமும், மேற்குறிப்பிட்டவற்றுக்கு சமமான தகைமைகளும்.

02. சேவை நிபந்தனைகள் :-

I இந்நியமனம் முற்றுமுழுதாக அமைய அடிப்படையிலானதாகும்.

II செயற்படுத்தப்படும் உபகருத்திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாக அமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நிர்ணயிக்கப்படும்.

III வேதனமும் ஏனைய படிகளும் அரச பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமையும்.

IV வேதனங்களும் ஏனைய படிகளும் வழங்கப்படும் காலம், செயற்படுத்தப்படும் உபகருத்திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாகவே அமையும். ஆயினும் பல்வேறு உபகருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதனால் தொடர்ச்சியாக பல உபகருத்திட்டங்களில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

**மேற்படி தகைமையுடையவர்கள் தங்கள் சுயவிபரங்களுடன் (BIO DATA) கிளிநொச்சி கச்சேரியில் உள்ள நிகொட் மாவட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு நேரடியாக வருகைதரும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தகைமைகளுடன் முதலில் வருபவர்களுக்கு இப்பதவியினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.**

தி.இராசநாயகம்,
அரச அதிபர்/மாவட்ட செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.
தொலைபேசி இல.021-2223945

(சி-8439)

# அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பு விரைவில் முடிவுக்கு வரவேண்டும்

## ஐ.நா. பொதுச்செயலர் வலியுறுத்து

**ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு விரைவில் முடிவு பெற வேண்டும் என்று, ஐ.நா. சபை பொதுச் செயலாளர் கொபி அனான் வலியுறுத்தியுள்ளார்.**

ஈராக்கில் அமெரிக்கத் தாக்குதலால் சதாமின் ஆட்சி அகற்றப் பட்டபின்னர் அங்கு இடைக்கால நிர்வாகம் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஈராக் அரச நிர்வகிக்க ஒரு கவுன்சிலும் அமைக்கப்பட்டுள்ளது. நியூ யோர்க் வந்துள்ள இந்த கவுன் சிலின் பிரதிநிதிகள் ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கு தங்களுக்கு சர்வதேச உதவி கோரி ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் நேற்று முன்தினம் வேண்டு கோள் விடுத்திருந்தனர்.

அப்போது பேசிய ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத் தியுள்ளார்.

ஈராக்கில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கை பற்றிய பட்டியலையும், ஈராக் பிரதிநிதிகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் அளித்தனர்.

இந்தக் கூட்டத்தின் போது ஈராக் கவுன்சிலுக்கு எதிராகக் கோஷம் எழுப்பிய இவர் அவை யிலிருந்து வெளியேற்றப்பட்ட தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## ரமாடியில் தாக்குதல் சிப்பாய் பலி!


ஈராக்கில் நேற்று இடம்பெற்ற தாக்குதலொன்றில் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் கொல்லப் பட்டார். மேலும் இருவர் காயம டைந்தனர்.

பக்தாத்திற்கு மேற்கே ரமாடி நகரில் இராணுவ வாகனத் தொடரணி மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



பிலிப்பைன்ஸ் சிறுவன் ஒருவன் கடந்த செவ்வாயன்று மணிலாவில் வீசிய கடும் காற்றிலிருந்து பாதுகாப்புத்தேடி கல் ஒன்றுக்கு பின்னால் அமர்ந்திருக்கிறார். இந்தவருடம் பிலிப்பைன்ஸை எட்டுத் தடவைகள் சூறாவளி தாக்கியுள்ளது.

## ஈபல் கோபுரத்தில் தீ விபத்து



உலகப் புகழ் பெற்ற பரீஸ் நகரத்திலுள்ள ஈபல் கோபு ரத்தில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கோபுரத்தின் உச்சியில் தீ ஏற்பட மின்சாரக்கோளாறு காரணம் எனத் தெரிய வரு கின்றது. இதனைப் பார்த்து ரசிப்பதற்குத் தினந்தோறும் பல்லாயிரக் கணக்கானோர் இங்கு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

இக் கோபுரம் உலக வர்த் தகக் கண்காட்சி, மற்றும் பிரான்ஸ் புரட்சியை நினைவு படுத்தும் வகை யில், 10,000 தொன்னுக்கு அதிகமான எடையும், 324 மீற்றர் உயரமும் கொண்ட தாலேயே உலகப் புகழ் பெற்றதாக விளங்குகின்றது.

# பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சொலமன்தீவுகளின் பிரதமர் தலைமறைவு!

சொலமன் தீவுகளின் பிரதம மந்திரி அலன் தலைநகரான கொனியாராவிலிருந்து பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் அந்தரங்கமான ஓரிடத்திற்குச் சென்றுள்ளார் என்றும், அமை திப்படையினர் அங்கு வந்து நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வந்த பின்னரே அவர் நாடுதிரும்புவார் என்றும் அறி விக்கப்படுகின்றது.

காணிப்பிரச்சினை காரணமாக சொலமன் தீவுகளின் அரச படை யினருக்கும் கிளர்ச்சிவாதி களுக்குமிடையே இடம் பெற்ற மோதலில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தகவல் தரு கையில், நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய பின்னரே பிரதமர் அலன், நாட் டைவிட்டு வெளியேறினார் என் றும் கூறப்படுகின்றது. சொலமன் தீவுகளில் முன்னைய இரா ணுவம் பலவந்தமாகத் தம்மைக் கடத்தி செல்லக்கூடும் என்று அச்சம் தெரிவித்துள்ளார்.

சொலமன் தீவுகளின் பாராளுமன்[illegible] சென்றவாரம் நடத்திய கூட[illegible]த்தில் பல்தேசிய அமைதிப்படையினர் அங்கு செல்ல அனுமதி வழங்கப்பட் டிருந்தது.

# சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் ஸ்பெயினில் 13 பேர் பலத்த காயம்!


ஸ்பெயின் நாட்டில் சுற்று லாப் பயணிகள் தங்கியிருந்த விடுதியை ஏற்ரா தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்ததில் 13 பேர் பலத்த காயமடைந் துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பதட்டம் நிலவி வருகின் றது. ஸ்பெயின் நாட்டில் தீவிர வாதிகள் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர்.

அடிக்கடி இந்நாட்டில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து வந்த தீவிரவாதிகள் தற்போது தமது தாக்குதல்களை சுற்றுலாப் பயணிகள் மீது மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந்நாட்டின் சுற்றுலா நகரமான அலிகாண்டிக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது வழமை.

தற்போது இந்நகருக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கியுள்ள விடுதி ஒன்றிலேயே எற்ரா தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த 02 குண்டு களை வெடிக்கச் செய்துள்ளனர்.



லைபீரியாவிலுள்ள போராளிகளால் தாக்கப்பட்ட அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் உலங்கு வானூர்தியிலிருந்து பாய்ந்து செல்லும் அமெரிக்க விமானப் படையினர்.

# பாகிஸ்தான் ஆதரவு அமைப்பு தாக்குதலிற்குப் பொறுப்பேற்பு

(புதுடில்லி)

காஷ்மீரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு தாக் குதல்களுக்குப் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் 07 இராணுவ வீரர்கள் உட்படப் 16 பேர் கொல்லப்பட்ட சம்ப வங்களுக்கு அல்சுறா எனும் தீவிரவாத அமைப்புப் பொறுப் பேற்றுக் கொண்டுள்ளது.

இச் சம்பவங்களுக்கு நாடாளு மன்ற மக்களவையில் நேற்று முன்தினம் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் சௌபருக் ரகுமான், காஷ்மீர் பிரச்சினையை சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையி லேயே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தாக்குதல்களை நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்துள் ளது.



ஈரானிய இரட்டைச் சகோதரிகளைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு தோல்வியுற்ற சிங்கப்பூரின் ரபேல்ஸ் மருத்துவமனை வைத்தியர்கள் நேற்று முன்தினம் இரவு நேபாள இரட்டைப்பெண்குழந்தைகளை சத்திரசிகிச்சைமூலம் வேறாக்கியுள்ளனர். அவர்களின் முன்னைய தோற்றத்தைப் படத்தில் காண்க.

# பாபர் மசூதி இடிப்புத் தொடர்பாக நாடாளுமன்றில் விவாதிக்க இணக்கம்

## -எதிரணி நடவடிக்கைக்கு அரசு பணிந்தது

(புதுடில்லி)

பாபர் மசூதி இடிப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடந்த சில தினங்களாக நீடிக் கும் அமளியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த முடிவு செய் யப்பட்டுள்ளது.

பாபர் மசூதி இடிப்புத் தொடர் பாகப் பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி ஆகி யோர் பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் அமளியில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நாடாளுமன்றத்தில் இரு அவை களும் செயற்பட முடியாமல் போனது.

இப்பிரச்சினையை முடிவு க்குக் கொண்டுவருவதற்காக, எதிர்க்கட்சிகளின் கோரிக் கையை ஏற்று, பாபர் மசூதி இடிப்புத் தொடர்பாகத் தனி விவாதம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இப்பிரச்சினை நாடாளுமன்றத்தில் விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளது.

# மத்திய அரசாங்கத்தின் மீது தி.மு.க.கழகம் அதிருப்தி

(சென்னை)

மத்திய அரசின் செயற்பாடு கள் திருப்திகரமாக இல்லை யென தி.மு.க.தலைவர் கருணா நிதி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர் களிடம் பேசிய அவரிடம் அரச ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக தாங்கள் எழுதிய கடிதங்களுக்கு உரிய பதில் கிடைத்ததா என வினவப்பட்ட போது,

தமது கடிதம் கிடைத்திருப்ப தாக மட்டுமே பதில் வந்துள்ள தாகப் பதிலளித்துள்ளார்.

மத்திய அரசின் நடவடிக்கை கள் தமக்கு திருப்தி அளிக்க வில்லையென்றும் அவர் கூறி யுள்ளார்.

# டேவிட் கெல்லியின் மரணம் ரொனி பிளேயருக்குப் புதிய தலைவலி!

ஐநா.சபை ஆயுதப் பரிசோதகர் குழுவில் இடம் பெற்றிருந்த பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெல்லியின் மரணம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரை பெரும் சிக்கலுக்குள் சிக்கவைத்துள்ளது. டேவிட் கெல்லியின் மரணம் பிளேயரின் பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடவும் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்தளவிற்கு டேவிட் கெல்லியின் மரணம் விவாதிக்கப்படுகின்றது. அதனால் ரொனிபிளேயர் ஊடகங்களினாலும் அவரது பிரிட்டிஷ் அமைச்சரவையினாலும் விமர்சிக்கப்படுகின்றார்.

"விஞ்ஞானியான டேவிட்கெல்லி எவ்வாறு மரணமானார்? அவரது மரணத்திற்குக் காரணம் யார்? ரொனி பிளேயருக்கும் டேவிட்கெல்லியின் மரணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது."



ரொனிபிளேயர்

என ஊடகங்கள் ஆத்திரத்துடன் சர்ச்சையை எழுப்பியுள்ளன.

அத்துடன் பிரிட்டிஷ் அமைச்சரவையில் டேவிட் கெல்லியின் மரணம் பற்றி விவாதிக்கப்படுகின்றது. ரொனிபிளேயர் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளார். என்றும் கூறப்படுகின்றது.

ரொனிபிளேயருடன் அவருடைய நெருங்கிய ஆலோசகரும் தொடர்புகளுக்கான பொறுப்பதிகாரியுமான அலாஸ்ரெயர் காம்ப்வெல் மற்றும் ரொனிபிளேயருக்குச் சார்பான அமைச்சர்களின் எதிர்காலம் கூட கேள்விக்குறியாகியுள்ளது என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களில் ரொனிபிளேயருக்கு மிகவும் நெருங்கிய ஆலோசகர் அலாஸ் ரெயர் காம்ப்வெல் வெகுவிரைவில் தனது பதவியை ராஜினாமா செய்வார் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஈராக் போரை நியாயப்படுத்துவதில் வெகு முனைப்பாக கருத்துக்கூறும் பிளேயர், டேவிட் கெல்லியின் மரணத்திற்கும் நியாயப்படுத்தலை கட்டாயம் வைத்திருக்காமலா இருப்பார்... என அவதானிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டிஷ் சார்பாக 59 வயதுடைய டேவிட் கெல்லி ஈராக்கில் அணுவாயுதப் பரிசோதனைக்குச் சென்றிருந்தார். அணுவாயுதப் பரிசோதனையில் விற்பன்னர் என வர்ணிக்கப்பட்ட இவர்தான், ஈராக்கில் அணுவாயுதம் இருக்கிறதா? இல்லையா? எனும் அறிக்கையை ரொனிபிளேயரிடம் சமர்ப்பித்திருந்தார்.

தற்போதைய நிலையில் அதாவது டேவிட் கெல்லி மரணமாவதற்கு முன்னர், ஈராக்கின் அணுவாயுத அறிக்கையை திரித்துக் கூறி விட்டதோடல்லாமல், அந்நாட்டின் மீதே போரும் தொடுக்கப்பட்டுள்ளதாக டேவிட் கெல்லி ரொனிப் பிளேயர் அரசு மீது கடுமையாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்றும்,

இத்தகவலை பிரிட்டிஸ் வானொலி பி.பி.சிக்கு இவர் அளித்தமையினால் தான் தற்போது மரணமானார் என்றும் கூறப்படுகின்றது.

அதனால்தான் பிரிட்டிஷ் அமைச்சரவை பி.பி.சிக்கு அளித்த தகவலை விசாரணை செய்ததாகவும், விசாரணை முடியவில்லை டேவிட்கெல்லியின் கதை முடிந்துவிட்டது என ஒருசாரார் கவலையடைகின்றனர்.

ஆனால் டேவிட்கெல்லியின் மரணம் கொலையல்ல, தற்கொலையே என பிரிட்டிஷ் பொலிசார் வாதிடுகின்றனர்.

கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை நடைப்பயிற்சிக்காகச் சென்ற தமது கணவரைக் காணவில்லையென அவரது மனைவி ஜெனிஸ் முறைப்பாடுசெய்ததையடுத்து, தாம் தேடுதல் நடத்தி வெள்ளிக்கிழமை, அவரது வீட்டிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் ஒக்ஸ்போர்ட்ஷையர் எனுமிடத்தில் அவரது உடலைக் காண நேர்ந்த போது அவருக்கு அருகில் கத்தியும், வலியைப்போக்கும் குளிசைகளும் இருந்தது என்பதனால், டேவிட் தமது கையைத்தாமே வெட்டி ரத்தம் வெளியேறி மரணமானதாகவும் இது கொலையல்ல என்பதற்கு இதுவே ஆதாரம் என்றும் பொலிசார் விவாதிக்கின்றனர்.

அ. கலைவாணி

ஆனால் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளாத பிரிட்டிஷ் பத்திரிகைகள், ரொனி பிளேயர் அரசைக் கடுமையாக விமர்சிக்கின்றன.

அது மட்டுமன்றி அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு யப்பான் சென்றுள்ள ரொனிப்பிளேயருக்கும், டேவிட் கெல்லியின் மரணத்திற்கும் தொடர்பு உள்ளது என முதல் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இதனைத் தாங்க முடியாது எனும் நிலையில் தான் போலும், ரொனிபிளேயர் அவசர அவசரமாக யப்பான் தலைநகர் டோக்கியோவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

அச்சந்திப்பில் பத்திரிகையாளர்களினால் பல சிக்கல்கள் உருவாகியிருப்பதாக அவர் கூறியது, இனி டேவிட் கெல்லி பற்றி எழுதாதீர்கள் எனும் விதமாகக் கூட அமைந்திருக்கலாம். ஆனால் அவரது ஆசையில் மண் விழுந்தது போல், பத்திரிகையாளர்களோ, நீங்கள் ஏன் கெல்லியைக் கொலை செய்தீர்கள்? பிரதமர் பதவியை ராஜினாமா செய்வீர்களா? அடுத்த பிரதமர் யார்...? எனக் கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டு அவரைத் திக்குமுக்காட வைத்து விட்டது என சி.என்.என் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் தான் ரொனி பிளேயரின் அரசு ஆட்டம் கண்டுவிடலாம் எனப் பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே ஈராக் போரை நியாயப்படுத்த முடியாத நிலையில் அப்பிரச்சினை பெரிய பூதகரமாக இருக்கையில், அடுத்துக் கெல்லியின் மர்ம மரணமும் பெரிய பூதகரமாக உருவெடுப்பதால் ரொனிப்பிளேயர் இவற்றை எப்படிக் கையாள்வார் என்பதே பெரிய புதிராக அவதானிகளிடையே உலாவருகின்றது.

மறுபுறம் டோக்கியோவில் பத்திரிகையாளர்களை அவசரமாகச் சந்திக்கக் காரணம் இல்லாமலில்லை. டேவிட் கெல்லியின் மரண சர்ச்சையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டால், தனது நாட்டில் பிரச்சினை தனக்கு ஏற்படாது என்றுதான் பிளேயர் செயலில் இறங்கினார். ஆனால், தானே சிக்கலில் மாட்டிவிட்டார் எனும் பரிகாச கருத்தும் இல்லாமலில்லை.

அதேநேரம் இன்றைய அரசியலைப் பார்க்கும் போது மக்கள் வெறுப்பும், நம்பிக்கையின்மையுமே கொண்டுள்ளனர் என்றும், டேவிட் கெல்லியின் மரணத்தை மக்கள் அரசியல் நிர்ப்பந்தங்களுக்குப் பலியாகிய அப்பாவியாகவே இனம் காண்கின்றனர் என எசெக்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் அந்தனிசிங் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் பி.பி.ஸி.தான் டேவிட் கெல்லியின் மரணத்திற்குக் காரணம் எனப் பிரிட்டிஷ் அரசு குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளது.

புலனாய்வுத் துறையின் அறிக்கையென மிகைப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஈராக் மீதான போர் பற்றிய சர்ச்சையை பி.பி.ஸி கிளப்பியதால்தான் டேவிட் கெல்லி தற்கொலை செய்தார் என்றும், இதற்கு பி.பி.ஸியே காரணம் என்றும் பிரிட்டிஷ் அரசு பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால் பி.பி.ஸி செய்தியாசிரியர் ரிச்சட் சம்ப்ருக் தொலைக்காட்சியில் தோன்றி டேவிட் கெல்லியின் பேட்டியின் சாராம்சத்தை விபரித்து, பிரிட்டிஷ் அரசின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இதேநேரம் டேவிட் கெல்லியின் மர்ம மரணம் பற்றித் துரித விசாரணை நடத்தப் பிரிட்டிஷ் பிரதமர் உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதிலும் முதல் கட்ட விசாரணைகளை பி.பி.ஸியிடமே மேற்கொள்ளப்படலாம் என்றும் கூறப்படுவதால், டேவிட் கெல்லியின் மரணம் புதிய திசையில் திரும்பியுள்ளது எனலாம். ரொனி பிளேயர்தான் காரணம் எனும் சர்ச்சை புதிய வடிவில் பி.பி.ஸி தான் காரணம் எனும் சிக்கலாகத் தலை தூக்கியுள்ளது போல்தான் தெரிகின்றது.

ஆனால் ஒரு நாட்டின் அணுவாயுதப் பரிசோதகர் என்பவர் சாதாரணமானவரா... அவரது உயிருக்கு ஆபத்து எனில் அவருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை யாருக்கு? பிரிட்டிஷ் அரசுக்குத் தானே?

ஆனால் மரணத்தைத் தழுவும் வரை டேவிட்கெல்லி தனது உயிருக்கு ஆபத்து என்றோ... அல்லது அச்சுறுத்தல் விடுக்கப் பட்டிருப்பதாகவோ... கூறவே இல்லை என்பதுடன் இதுவரை அவரது மனைவி ஜெனிஸ் இத்தகைய விடயங்கள் ஏதும் இடம் பெற்றதாகக் கூட தெரிவிக்கவில்லை.



டேவிட் கெல்லி

எனவே, டேவிட் கெல்லி வெளியாட்களினால் அதாவது பிரிட்டிஷ் தவிர்ந்த ஏனைய நாடுகளினால் கொலை செய்யப்படவில்லை எனும் உண்மையுடன், பிரிட்டிஷ் அரசினால் தான் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என அரசியலைச் சூழ்ந்து கவனிக்கும் அவதானிகள் கூறுகின்றனர்.

எனவே, இதில் எது உண்மை? எது பொய்? என்பதை கட்டாயம் பிரிட்டிஷ் அரசு சொல்லியே தீர வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று எதிர் பார்க்கப்பட்டாலும், மறுபுறும், ரொனிபிளேயர் ஈராக் மீதான போரையே வரலாறு மன்னிக்கும் என்று கூறி சமாளிப்பதில் இறங்கியுள்ள நிலையில், டேவிட் கெல்லியின் மரணத்தை எப்படிக் கூறி சமாளிப்பதில் இறங்குவாரோ எனும் வினாவும் இல்லாமலில்லை.

ஆனால் தற்போது நிலவும் இந்த சர்ச்சையால் மக்களும், ஊடகங்களும் ரொனிபிளேயரை வெறுக்க ஆரம்பித்துள்ளார்கள் என்று கூறப்படுவதால், ரொனிபிளேயர் எப்படி இவற்றிலிருந்த மீள்வார்... தொடர்ந்தும் பிரதமர் பதவியில் நிலைப்பாரா... என்பதே தற்போதைய வினாவாகும்.

---

## பிரதமர் ரணில் சீனா விஜயம்

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகஸ்ட் 1ஆம் திகதி எட்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சீனா செல்லவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த எட்டு நாள் விஜயத்தின் போது சீனாவில் பிரதமர் பல அரசியல் தலைவர்களைச் சந்திப்பதுடன், சீன-சிறிலங்கா வர்த்தகத்தை விஸ்தரிப்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளதாகத் தெரிய வருகிறது.

## உல்லாசப் பயணிகளைக் கவர கொழும்பில் 'டிஸ்னி லாண்ட்'

சிறிய அளவிலான உலகப் புகழ்பெற்ற 'டிஸ்னி லாண்ட்' ஒன்றைக் கொழும்பில் அமைக்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

கொழும்பு மாநகரசபைக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களில், இத்திட்டம் முதன்மை வகிப்பதாகவும், சிறிலங்காவுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர, இத்திட்டம் பெரிதும் உதவும் என்றும் கொழும்பு உதவி மேயர் அஷாத் ஷலி கூறியுள்ளார்.

இதுவரை காலமும் பல உல்லாசப் பிரயாணிகளையும் கவர்ந்த விகார மகாதேவி பூங்காவையே, ஒரு புதிய 'மினி டிஸ்னி லாண்ட்' ஆக மாற்றும் திட்டத்தை உருவாக்கியுள்ளதாகவும், இத் திட்டத்தின் அடுத்த கட்டமாக, கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் பலவித கேளிக்கை விநோத நிகழ்வுகளைக் கொண்ட பலவித திட்டங்களும் அமுல் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர் சேவை பதவியுயர்வுத் திட்டத்தை 2004 வரை நிறுத்தி வைக்க தீர்மானம்

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் சேவை பதவி உயர்வு வழங்கும் திட்டத்தை அடுத்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சினால் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிரியர் சேவை நிலையியற் குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் கூறியுள்ளார். இவர் மேலும் கூறுகையில், ஆசிரியர் சேவையில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அடுத்த மாதம் 26ஆம் திகதி நடைபெறும் நிலையியற் குழுக்கூட்டத்தில் முடிவெடுத்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

## மாநகர சபை முதல்வருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

தெஹிவளை, கல்கிச மாநகர சபை முதல்வருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.


கடந்த வாரம் இவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்தே இந்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதல்வருக்குத் தொலைபேசி மூலம் தொடர்ந்தும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுவருகிறது. இதுகுறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# கறுப்பு ஜூலை ஈழத்தமிழர் வரலாற்றில் திருப்புமுனை

**1983ஆம்** ஆண்டு ஜூலை மாதம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையான காலமாகும். விடுதலைப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக திட்டவட்டமாக பரிணாமம் பெற்ற காலமாகும். 1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்ற கெரில்லா முறையிலான தாக்குதலில் சிறிலங்காப் படையினர் சந்தித்த இழப்பானது தமிழர் விடுதலைப் போராட்டம் எவ்வாறு எதிர்காலத்தில் அமையப் போகிறது என்பதையும் சிங்களப் படைகள் எதற்கு முகம் கொடுக்கப் போகின்றன என்பதையும் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் இனவாதிகளுக்கும் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் உணர்த்தியது.

இதனைச் சாட்டாக வைத்து தென்னிலங்கையில் இனவாதிகள் ஆடிய வெறியாட்டம், அதனால் தமிழ் மக்கள் பட்ட அவலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உலகிற்கு உணர்த்தியது. "சேர்ந்து வாழ்வது இவ்வளவு கடினமென்றால் ஏன் பிரிந்து வாழ முடியாது" என நியூயோர்க் டைம்ஸ் கேள்வி எழுப்பியது.



திருநெல்வேலியில் தாம் சந்தித்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ளமுடியாத சிறிலங்கா இராணுவம் மறுநாள் அதிகாலை அப்பகுதியில் பல அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொன்றது. கண்ணிவெடிச் சம்பவம் குறித்து எதுவும் அறியாது பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்த மாணவர்கள் சிலரை மானிப்பாயில் வைத்து பஸ்சிலிருந்து இறக்கிச் சுட்டுக் கொன்றது.

கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியான 13 இராணுவத்தினரின் சடலங்களையும் வழமைபோல் உறவினர்களிடம் ஒப்படைக்காமல் அவை எல்லாவற்றையும் படைத்தலைமை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று ஒன்றாகத் தகனம் செய்தது. இதன் மூலம் ஆத்திரமுற்ற சிங்கள மக்களின் தாக்குதல்களாக தமிழ் மக்கள் மீதான இனவாதிகளின் தாக்குதலை வெளிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சனாதிபதி மாளிகையில் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கையில் சனாதிபதி மாளிகையிலிருந்து 100 யார் தூரத்திலுள்ள தமிழர்களின் கடைகள் எரிந்து கொண்டிருந்தன. கொழும்பில் தமிழ் மக்களின் வியாபார நிலையங்கள், தொழிற்சாலைகள், குடியிருப்புகள் என்பன தீயிடப்பட்டு அழிக்கப்பட்டன. கொழும்பில் மட்டும் 1800க்கு மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. 3500இற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு எரியூட்டப்பட்டன. தமிழர் மீதான வன்முறை கொழும்பில் மட்டுமல்ல தென்பகுதி முழுவதிலும் மலையகத்திலும் தீவிரமாகப்பரவியது.

ஜூலை மாதம் 25ஆம் திகதி கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான பாரிய வன்முறைகள் ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்களால் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல்களின் உதவியுடன் வீடுவீடாகச் சென்ற இக்குண்டர்கள் தமிழர்களை வெட்டியும், தாக்கியும் கொலை செய்ததுடன் உடைமைகளைச் சூறையாடியும் குடியிருப்புகளுக்குத் தீவைத்தும் நாசம் புரிந்தனர்.

இவற்றைக் கட்டுப்படுத்த என்று கூறிக் கொண்டு அன்றைய சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரகடனப்படுத்திய ஊரடங்குச் சட்டம் இக்குண்டர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை. வன்முறைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிசார் அவற்றைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை வெளிநாட்டுத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச் செய்தன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் கிரிமினல் கைதிகளாலும் கொலைக் குற்றவாளிகளாலும் சிறைக்குள் வைத்தே வெட்டிக் கொல்லப்பட்டனர். 25ஆம் திகதியும், 27ஆம் திகதியுமாக இரு தினங்கள் சிறைக்குள் நடந்த படுகொலைகளை மூடிமறைத்துவிட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முயன்றது. சிறைக்குள்ளேயே நிராயுதபாணிகளாக நின்ற கைதிகள் மீது சிங்கள இனவாதிகளால் திட்டமிடப்பட்டு சிறைக் காவலர்களால் ஏவிவிடப்பட்ட இக்கைதிகள் நடத்திய இப்படுகொலை வெறியாட்டம் குறித்து விசாரணைகள் எதுவுமே நடத்தப்படவில்லை.

இங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த குட்டிமணி நீதிமன்ற விசாரணையின் போது "நான் இறந்ததும் எனது கண்களை பார்வையற்ற தமிழர் ஒருவருக்குப் பொருத்துங்கள். மலரப் போகும் தமிழீழத்தை அக்கண்களால் நான் பார்க்கவேண்டும்." என்று கூறியதற்காக அவரது இரு கண்களும் தோண்டியெடுக்கப்பட்டு நிலத்திலே போடப்பட்டு மிதிக்கப்பட்டன.

இக்கொடூரங்களுக்கெல்லாம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வைத்திருந்த பதில் பிரிவினைவாதத் தடைச் சட்டமும் தமிழ் மக்கள் மீதான தீவிரமான யுத்தமும் ஆகும்.

ஜூலை வன்முறைகள் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திய உணர்வலைகள் சிங்கள ஆட்சியாளர்கள் மீதான அழுத்தம் போராட்டத்தின் வளர்ச்சி என்பன மீண்டும் இவ்வாறான ஒரு வன்முறை தென்பகுதியில் தோன்றுவதைத் தடுத்திருந்தாலும் அதன் பின்னர் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதமும் யுத்தமும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் பலி கொண்டதுடன், பல லட்சக் கணக்கான மக்கள் ஏறத்தாழ ஒட்டு மொத்தமாக தமிழினமே இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகவும் உள்நாட்டில் அலைவதற்கும் காரணமாகியது. தமிழ் மக்களின் வளங்கள் பாரிய அளவில் அழியக் காரணமாகியது.

ஆனால் இந்தப் பாரிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நடத்திய போராட்டமானது சிங்கள இனவாதிகளின் திட்டத்தை முற்றாகச் சிதைத்தது. அதாவது தமிழ் மக்களின் போராட்டத்தை படிப்படியாகச் சிதைத்து விட்டு முழு இலங்கையையும் ஆக்கிரமிக்கும் கனவை அழித்தது. இதன் விளைவே இன்றைய சமாதான நடவடிக்கைகளாகும்.

தமழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது தம்மால் வெல்லப்பட முடியாத ஒன்று என்பதை சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக யுத்தமொன்றை மீண்டும் ஆரம்பிக்க முயன்றால் சிறிலங்கா உலக நாடுகளிடம் கையேந்த மட்டுமல்ல தனது இறைமையையே தொலைக்க வேண்டி வரும் எனவும் உணரப்பட்டுள்ளது. ❑

# அரசியற்தீர்வு தவிர வேறு வழியில்லை என நிரூபித்த கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல்

**இ**னப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியற்தீர்வொன்று காணப்படுவதைத் தவிர வேறு மார்க்கம் சாத்தியமாகப் போவதில்லை என்பதும்- இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு அதிகரித்ததற்கும் அடிப்படையான முக்கிய நிகழ்வான கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதும், விமானப் படைத்தளத்தின் மீதானதுமான தாக்குதல் இடம்பெற்று இன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றது.

வடக்குப் போர் முனையில் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்திருந்த சிறிலங்கா படைத்தரப்பிற்கு கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதலானது பெரும் அதிர்ச்சிக்குரியதொன்றாகவே இருந்தது. இதேவேளை இத்தாக்குதலானது சிறிலங்காவின் தளங்களின் பாதுகாப்புக் குறித்து பலத்த கேள்வியையும் ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

இத்தாக்குதலில் சிறிலங்கா விமானப் படையும், எயார்லங்கா விமான சேவையும் பல விமானங்களை இழந்ததாயினும், இவற்றில் ஏற்பட்ட பெரும் பொருளாதார இழப்பு என்பனவற்றைவிட அரசியல் - பொருளாதார ரீதியில் சிறிலங்காவிற்கு இத்தாக்குதல் கொடுத்த நெருக்கடியானது மிகவும் பாரியதாக இருந்தது.

இத்தாக்குதலை அடுத்து சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் ஓர் ஸ்தம்பித நிலை அடைந்ததென்றே கூறலாம். விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியில் தீவிர முனைப்புக் காட்டி வந்த சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் இராணுவ முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவொரு இக்கட்டான கட்டத்திற்கு உள்ளாகியது. ஏற்கனவே ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சி, அதனை மீட்டெடுக்க மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கையின் தோல்வி என்பன இராணுவ இயந்திரத்தைப் பெரும் சேதத்திற்கு உள்ளாக்கியிருந்தது. எனினும், கட்டுநாயக்க சம்பவம் அதனை ஓர் ஸ்தம்பித நிலைக்கு இட்டுச் சென்றதெனலாம்.

இராணுவ ரீதியிலான முடக்கம் இவ்வாறானதாக இருக்கையில், பொருளாதார ரீதியில் சிறிலங்கா என்றுமில்லாத நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியதாகியது. உல்லாசப் பயணிகள், முதலீட்டாளர்கள் கொழும்பு வர அஞ்சினர். கப்பல் கம்பனிகளும் கொழும்பிற்கான கட்டணங்களை அதிகரித்தன. நாட்டின் ஏற்றுமதியும், இறக்குமதியும் பெரியளவில் பாதிப்பிற்குள்ளாகின.

இத்தாக்குதலைத் தொடர்ந்து சிறிலங்காவின் 'சுதந்திர வரலாற்றில்' என்றுமில்லாதவாறு பொருளாதாரம் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. பொருளாதார வளர்ச்சிவீதம் எதிர்க்கணியமானது. நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்தல் வேண்டும் என்றால் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை, சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமும் அரசியல் ரீதியில் பெரும் நெருக்கடிக்குள்ளாகியது. யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற சனாதிபதி சந்திரிகாவின் சித்தாந்தம் இத்தாக்குதல் மூலம் முன்னெடுக்கப்பட முடியாததொன்றாகியது. யுத்தம் வெல்லப்பட முடியாதது என்பதும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதும் சிங்கள மக்கள் மத்தியில் வலுப்பெறவும் காரணமாகியது.

அதாவது கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதலானது, இலங்கையின் அரசியலில் பெரும் மாற்றம் ஒன்றிற்கு அடிகோலியதெனலாம். ஒரு வருடத்திற்கு முன்பாக, சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்த பொ.ஐ.முன்னணி பொதுத் தேர்தலில் தோல்வி காண இத்தாக்குதல் காரணமாகியது. விடுதலைப்புலிகளும்-ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாகச் செயற்படுவதாக பொ.ஐ. முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதும் ஐ.தே. கட்சியின் வெற்றியைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனமைக்கு கட்டுநாயக்கவில் ஆயுதப் படையினர் சந்தித்த தோல்வியே காரணமெனின் மிகை யாகாது.

இது மாத்திரமல்ல. தற்போதைய அரசாங்கம் சமாதான முயற்சிகளைத் தொடர்வதில் காட்டும் அக்கறைக்கும் இத்தகைய இராணுவத் தோல்விகளே காரணம் எனக் கூறுவது தவறாகமாட்டாது.

இதேவேளை, சர்வதேச சமூகம் இனப பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்விற்கு வருமாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் இத்தாக்குதல் வகைசெய்தது எனலாம்.

சிறிலங்கா அரசிற்குப் பல நாடுகள் இராணுவ ரீதியில் உதவிகளை வழங்கிவந்த போதும், ஆனையிறவுத் தோல்விகளின் பின் கட்டுநாயக்கவில் ஏற்பட்ட தோல்வியானது அரசியற் தீர்வைத் தவிர இனப்பிரச்சினைக்கு வேறு வழி இல்லை என்பதை அவற்றிற்கு உணர்த்தின. இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிக்கவும், சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கவும் அவை முற்பட்டன.

இந்தவகையில் தற்பொழுது கடைப் பிடிக்கப்பட்டுவரும் யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முன்னெடுப்புக்கள் என்பனவற்றிற்கு மட்டுமல்ல, சிறீ லங்கா அரசாங்கம் யுத்தம் குறித்து தீவிரமாகச் சிந்திக்காமைக்கும் கட்டுநாயக்க விமானத்தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் முக்கிய பங்காற்றுகின்றது எனின் அது மிகையல்ல.



சிறிலங்கா அரசாங்கம் சமாதானத்தின் மீது அக்கறை கொண்டதாக உள்ளதெனின், கடந்த காலத்தில் யுத்தத்தில் அது பெற்றுக் கொண்டுள்ள பாடமும், அனுபவங்களுமே காரணம் ஒழிய, தமிழ் மக்கள் மீது கொண்ட பரிவினாலோ, மனித உரிமையில் கொண்ட மோகத்தினாலோ அல்ல. ❑

# கடலில் மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க கண்காணிப்பாளர் அதிகரிக்கப்படுவர்

## கண்காணிப்புக் குழு பிரதித் தலைவர் ஹெறாக்லண்ட்

**சிறிலங்காக் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் கடலில் ஏற்படும் மோதல் நிலையை இல்லாது தடுக்க கடற் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹெறாக்லண்ட் கடந்த திங்களன்று தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம், திருகோண மலைப் பகுதிகளில் இந்த அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. திருகோணமலையில் இரண்டு பிரதிநிதிகள் இருந்தனர். இதை நான்காக அதகரித்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் ஒரு கடற்கண்காணிப்பாளர் மாத்திரமே உள்ளார். கடற்கண் காணிப்பாளர்களின் எண்ணிக்கையை 10ஆக உயர்த்த எண்ணியுள்ளோம். இதில் திருகோணமலைக்கு ஆறு பேரும் யாழ்ப்பாணத்திற்கு நான்கு பேரும் இருப்பர். புதியவர்கள் நோர்வே, பின்லாந்து, சுவீடன், ஐஸ் லாந்து ஆகிய நாடுகளிலிருந்து அழைக்கப்படுவர்.

கடற் கண்காணிப்புக்கு இது மிகவும் உதவியளிக்கும் இருபகுதியினரும் தமக்குள்ள பிரச்சினைகளை மேசைக்குக் கொண்டுவரா விட்டால் தீர்வும் காணமுடியாது.

இருபகுதியினரும் ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். இரண்டையும் வைத்து ஒரு அடிப்படையைத் தயாரிக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கடற்றொழிலாளர் சமாசப் பணியாளர் 33 பேருக்கு ஆளணி அங்கீகாரம்

முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பணியாளர்களுக்கு ஆளணி அங்கீகாரம் கிடைத்துள்ளது. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசம் 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

எவ்வளவோ சிரமத்தின் மத்தியிலும் பணியாளர்கள் கடமையாற்றி வந்தும் ஆளணி அங்கீகாரம் கிடைக்கவில்லை.

தற்பொழுது முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பெரும் முயற்சியினாலும், முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முயற்சியினாலும் கடந்த 19ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிலிருந்து சமாசப் பணியாளர்கள் 33 பேருக்கு ஆளணி அங்கீகாரம் கிடைத்துள்ளது என முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பொது முகாமையாளர் திருமதி ப.விவேகானந்தம் தெரிவித்தார். (20)

# கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளான முள்ளியவளை உப அலுவலகம், செம்மலை உப அலுவலகம், முள்ளிவாய்க்கால் உப அலுவலகம், முல்லைத்தீவு உப அலுவலகம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய சகல பகுதிகளிலும் 2003ஆம் ஆண்டிற்கான கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். நாய்களை வளர்ப்பவர்கள் பிரதேச சபையால் வழங்கப்பட்ட இலக்கத் தகடுகளை நாய்களின் கழுத்தில் கட்டி வளர்ப்பதுடன் வளர்ப்பு நாய்களை குறிப்பிட்ட காலப்பகுதிகளில் காலை 4.00 மணி தொடக்கம் நண்பகல் 10.00 மணி வரை வீட்டில் கட்டி வைத்திருக்குமாறும் வேண்டப்படுகின்றனர். வீதியில் திரியும் அனைத்து நாய்களும் கட்டாக்காலி நாய்களாகக் கருதப்பட்டு இன்று தொடக்கம் தொடர்ச்சியாக அழிக்கப்படும் என கரைதுறைப் பற்றுப் பிரதேச சபையினரும், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் அறியத் தந்துள்ளனர்.(20)

# இடைக்கால நிர்வாகம் குறித்து ஆராய பாராளுமன்ற விவாதம் உடன் தேவை

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

வட-கிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்புக் குறித்து ஆராய இரண்டு நாட்கள் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். உத்தேச அமைப்புக் குறித்து பிரதமரும், அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களும் முரண்பட்ட அறிக்கைகளை விடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஊடகங்கள் மற்றும் சர்வதேச அபிப்பிராயங்களும் வெவ்வேறாக இருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனால் உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்புப்பற்றி மக்களுக்கு தெரிவிக்கும் நோக்குடன் இவ் விவாதத்திற்கு மிக விரைவில் ஒரு திகதியை நிர்ணயிக்கும்படி அவர் சபாநாயகரை கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மொழித்தினப் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டிகள் இவ்வார இறுதியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் தமிழ் மொழித்தின விழாவும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கூத்து விழாவும் நடைபெறவுள்ளது என மாகாணக் கல்வித்திணைக்களத்தின் தமிழ் மொழித்தின அமைப்புக்குழு தெரிவித்துள்ளது.

# புலிகளின் விவேகமும் வேகமும் நிறைந்த விட்டுக் கொடுப்பைப் பாராட்ட வேண்டும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் விவேகமும், வேகமும் நிறைந்த விட்டுக்கொடுப்பைப் பாராட்ட வேண்டுமென சிறிலங்காவின் காணி அமைச்சர் கலாநிதி ராஜிதசேனாரட்ண கூறியுள்ளார்.

20 வருடங்களாக கெரில்லாப் போரில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளோடு அரச படைகளை ஒப்பிட்டுப் பேசுவதைத் தவிர்த்து விடுதலைப்புலிகளின் சமாதான முன்னெடுப்புக்களைப் புரிந்து செயற்படுவது அவசியமாகும்.

கிழக்கில் அமைக்கப்பட்ட புதிய முகாம் மற்றும் வடக்கு - கிழக்கு இடைக்கால அலகு குறித்த விடயம்என்பவற்றில் விடுதலைப் புலிகள் விரைவில் நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அதற்குத் தேவையான கால அவகாசம் வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் குரங்குபாஞ்சான்குளம் பகுதியில் புதிய முகாம் அமைத்திருப்பதாகவும். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இதற்குச் சரியான முடிவை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# 200 மலசல கூடங்கள் அமைக்க முல்லை. நலன்புரிச் சங்கம் நடவடிக்கை

எக்சோ கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் முல்லை. மக்கள் நலன் புரிச்சங்கத்தினால் முல்லைத்தீவு கரையோரப் பிரதேசத்தில் இவ்வாண்டுக்குள் தனிநபர் குடும்பத்தினருக்காக 200 நீரடைப்பு மலசல கூடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக முல்லை. மக்கள் நலன்புரிச் சங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், மேற்படி நிறுவனத்தின் 73 இலட்சத்தி 56 ஆயிரத்தி 344 ரூபா நிதியுதவியுடன் இவ்வாண்டுக்குள் 200 மலசல கூடம் அமைக்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 12 மலசல கூடம் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 188 மலசல கூடங்கள் விரைவில் அமைக்கப்பட்டு கையளிக்கப்படும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

# சிறிலங்கா இராணுவம்-பொலிசார் கூட்டாக வவுனியாவில் வீதிச் சோதனை நடவடிக்கை

## துருவித்துருவி மக்கள் மீது விசாரணை

வவுனியாவில் முதற்தடவையாக கடந்த திங்களன்று வீதிச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் நிறுத்தப்பட்டிருந்த வீதிச் சோதனை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பூந்தோட்டத்திற்கும், வவுனியா நகரத்திற்கும் இடையில் வைத்து வீதியால் சென்ற மக்களை மறித்த இராணுவத்தினரும் பொலிசாரும் தேசிய அடையாள அட்டைகளைப் பார்வையிட்டதுடன் அவர்களைத் துருவித் துருவி விசாரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (10)

# மலேசிய முதலீட்டாளரை வரவழைக்க நடவடிக்கை

இலங்கை மலேசிய வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு இரண்டு நாடுகளினதும் வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது. மலேசிய முதலீட்டாளர்களின் முதலீடுகளை இலங்கையில் அதிகரிக்கச் செய்வதே அத்திட்டத்தின் நோக்கமாகும். அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, ஜீ.எல்.பீரிஸ், மகிந்த சமரசிங்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# குழாய்க்கிணறுகள் அமைப்பு

(வவுனியா)

வவுனியாவில் ஜப்பான் நிதியுதவியுடன் 47 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கிற்கு 6.6 மில்லியன் ரூபாவும், வவுனியா தெற்கிற்கு 3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. (10)

# சுபத்திரன் கொலை வழக்கு நீதிமன்றால் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர். எல். எவ். வரதர் அணியின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் சுபத்திரன் கொலை தொடர்பான வழக்கு விசாரணை செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை கடந்த திங்களன்று யாழ். மேலதிக நீதவான் சுப்பிரமணியம் முன்பாக இடம்பெற்றது. இதன்போது தமது விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க கால அவகாசம் தருமாறும் பொலிசார் கேட்டிருந்தனர். இதனை ஏற்றுக் கொண்ட நீதவான் அடுத்த தவணையின்போது விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரியின் காவலாளிகள் இருவரும் திங்களன்று நீதிமன்றத்தில் முன்நிறுத்தப் பட்டிருந்தனர்.

# பாம்புக் கடிக்கு இலக்காகி ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை 7. 10 மணிக்கு முரசுமோட்டை வாசியான கணபதி குலம் (வயது-31) என்பவர் பாம்புக் கடிக்கு இலக்காகி தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று இவ்வாரம் இரண்டு பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# பல்வேறு குற்றச்செயல்களைப் புரிந்த 145 பேர் கொழும்பில் ஒரு வாரத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 145 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

இவர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 56 பேர் திடீர் தேடுதல்களின் மூலம் கைது செய்யப்பட்டதாக பிரதி பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். அத்துடன் 19 பேர் பாரிய குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படுகிறது.

## ஜீப் வண்டிகள் வழங்கல்

விவசாய அபிவிருத்திக்காக இந்தியாவின் கடன் வழங்கும் திட்டத்திற்கமைய 150 ஜீப்வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் திஸாநாயக்க இவற்றை உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் நேற்று முன்தினம் கையளித்துள்ளார். மேலும் 150 ஜீப்வண்டிகள் அடுத்த வருடம் வழங்கப்படுமென அவர் கூறியுள்ளார்.

# படை வாகனம் குடைசாய்வு 46 படையினர் காயம்

அம்பாறை ஏறகம சிங்கபுர பகுதியில் அதிரடிப்படையினர் பயணம் செய்த 'ரக்' வண்டியொன்று குடைசாய்ந்தமையால் சுமார் 46 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலைமை மோசமாகவுள்ளதாக அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

விடுமுறையில் சென்றிருந்த அதிரடிப்படையினர் மீண்டும் சேவைக்கு திரும்பும் போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



## சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்து கொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகிறோம்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-07-2003

## ஆயுதக் கலாச்சாரம்!

"தற்போதைய சூழ்நிலையில் நாடு உருப்படும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், சிறு பிரச்சினைகளுக்கும் கூட துப்பாக்கிகளைக் கையில் எடுக்கின்றனர். கொலை கலாச்சாரம் மலிந்து காணப்படுகின்றது. அத்தகைய கொலைகாரர்கள் அரசியல் வாதிகளின் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் ஒருவகையில் யதார்த்தத் தின்பாற்பட்டதே.

சிறிலங்காவில் இன்று படுகொலைகள் இடம் பெறுவது சாதாரண மாகிவிட்டது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது போன்று சிறிய விடயங்களுக்கும் ஆயுதங்களைக் கையில் எடுக்கின்றனர் என்பது உண்மையே. ஆனால், இதற்குக் காரணம் ஆயுதங்கள் அந்தளவிற்கு மலிவானதாகிவிட்டது என்பதே.

சிறிலங்காவில் இன்று ஆயுதக் கலாச்சாரம் வெகுவாகப் பரவி யுள்ளது. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் பாதாள உலகக் கோஷ்டியினரும், அவர்களுடன் இணைந்துள்ள சிறிலங்கா ஆயுதப் படையில் இருந்து தப்பி ஓடியவர்களும், இதில் முக்கிய பங்காற்றுபவர்களாக இருப்பினும் கூட இவற்றிலும் அரசியல் இல்லாமல் இல்லை.

கொழும்பையோ அன்றித் தென்னிலங்கையின் ஏதோ ஒரு பகுதியையோ மையமாகக் கொண்டியங்கும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு ஏதோ ஒருவகையில் அரசியல் வாதிகளுடன் நெருக்கம் உண்டு. சில கோஷ்டிகள் அரசியல்வாதிகளின் தேவைகளை நிறைவு செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவையாகவும் உள்ளன. இந்த ரீதியில் அரசியல் வாதிகள் இப்பாதாள உலகக் கோஷ்டியினர், கொலைகாரர்களுடன் நெருக்கம் கொண்டவர்களாகவே உள்ளனர்.

சிறிலங்காவின் திறந்த பொருளாதாரக் கொள்கையும்–தென்னிலங்கையில் கொழும்பு மேற்கு–கிழக்கு நாடுகளுக்கானதொரு கடத்தல் மையமாக அது வளர்ச்சி கண்டுள்ளமையும் பாதாள உலகக் கோஷ்டியினரின் வளர்ச்சிக்குக் காரணமாகும். ஆனால், போதிய அளவில் ஆளணிகளையும், ஆயுதத் தளபாடங்களையும் இவை மாறுவதற்கு இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கைகளே காரணமாகும்.

யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளஇக்காலப் பகுதியில் கூட, சிறிலங்கா இராணுவத்தில் இருந்து 4000க்கும் மேற்பட்டோர் தப்பி ஓடுபவர்களாகவுள்ளனர். இதேவேளை, இது வரையில் தப்பி ஓடியோரின் எண்ணிக்கை குறித்து சரியான தகவல்கள் கிடைக்கப் பெறுவது கடினமாகவே உள்ளது. ஆயினும் குறைந்தது 35000க்கும் மேற்பட்டோர் தப்பி ஓடியுள்ளனர். இந்நிலையில் பாதாள உலகக் கோஷ்டியினரின் ஆளணித் தேவை என்பது இலகுவில் நிவர்த்திக்கக் கூடியதாகவே உள்ளது.

இதேசமயம், இராணுவத்திலிருந்து தப்பிஓடும் ஒரு தரப்பினர் ஆயுதங்களுடன் தலைமறைவாகிவிடுகின்றனர். அத்தோடு இராணுவத்திலுள்ள ஒரு தரப்பினர் பாதாள உலகக் கோஷ்டியுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஆயுதத் தளபாடங்களை பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விநியோகிப்பவர்களாகவும் உள்ளனர். இந்த வகையில் பாதாள உலகக் கோஷ்டியினர்/கொலைக்காரக் கும்பல்கள் ஆயுதங்களையும் போதியளவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை, அரசியல் வாதிகளின் தேவைகளை நிறைவு செய்யப் பாதாள உலகக் கோஷ்டியினர் தேவையாக இருப்பதனால், அரசியல்வாதிகள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்களாகவுள்ளனர். இதனால் அரசியல்வாதிகளின் மாளிகைகள், மறைவிடங்கள் என்பன இவர்களின் வாழ்விடமாகின்றன.

இதனைவிட ஆயுதப் படையினரை தமது அரசியற் தேவைக்காகப் பயன்படுத்தும் ஆட்சியாளர்களும் உள்ளனர். இதன் காரணமாக ஆயுதப் படையினரில் ஒரு தரப்பினர் பலம் பெற்றவர்களாகவும், தட்டிக் கேட்க முடியாதவர்களாகவும் வளர்ந்துள்ளனர். எடுத்துக் காட்டாக சனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவினர் கடந்த காலத்தில் நடந்து கொண்டுள்ள விதத்தைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆனால், பல அரசியல் வாதிகள் பாதாள உலகக் கோஷ்டிகளுடன் தொடர்புடையவர்களாக இருக்கையில், சில அரசியல்வாதிகளோ தாமே இத்தகைய நடவடிக்கைகளை முன்னின்று நடத்துபவர்களாகவுள்ளனர். எடுத்துக் காட்டாக உடத்தலவின்னப் படுகொலை விவகாரத்தில் ரத்வத்தவின் புதல்வர்களே நேரடியாக இக்கொலைகளை நடத்தினர்.

இந்நிலையில், ஆயுதக் கலாச்சாரம் அதிகரித்துவிட்டது. கொலைகள் மலிந்து விட்டன. நாடு இனி உருப்படும் எனக்கூற முடியாது என்பது போன்ற சனாதிபதியின் குற்றச் சாட்டுக்கள் நிராகரிக்கத்தக்கவை அல்லத்தான். ஆனால், கொலைகாரர்களோ மத்தியில் அமர்ந்திருக்கையில், அன்றி வீட்டுக்காரரே கொலைகாரர்களாக இருக்கையில் எவ்வாறு நீதி கிட்டும்?

# பஹ்ரேனில் சிறிலங்காப் பெண்கள் பலர் சிறைப்படுத்தி அடிமைகளாக விற்பனை!

### - தப்பிவந்த பெண்கள் அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

பஹ்ரேனில் 'மனாமா' நகரிலுள்ள புதிய மாடிக்கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் சிறிலங்காப் பெண்களை சிறைப்படுத்தி வைத்து அவர்களை வீடுகளுக்கு விற்பனை செய்யும் வியாபார நடவடிக்கை ஒன்று அங்கிருந்து தப்பிவந்த பெண்கள் மூலம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் முகவர்களால் அனுப்பப்படும் யுவதிகளை பஹ்ரேன் முகவர்கள் பொறுப்பேற்று வீடுகளில் பணிக்கமர்த்தும் போது அங்கு ஏற்படும் விபரீதங்களால் வீட்டைவிட்டு வெளியேறிமேற்படி முகவரகத்திற்கு வந்து சேரும் பெண்கள் இருட்டறைகளில் அடைத்து வைக்கப்படுவதாகவும் இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களில சிறிலங்கா, இந்தியப் பெண்கள் அதிகமாக உள்ளதாகவும் தப்பி வந்த பெண்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு தப்பிவந்த குருணாகலையைச் சேர்ந்த 19 வயதுப் பெண் ஒருவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மேற்படி முகவரகத்தில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ் இந்தியா போன்ற நாடுகளின் பணிப்பெண்களும் இருப்பதாகவும் சிறிலங்காவிலிருந்து சென்றோரை ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாத வகையில் இருப்பதற்கு அங்குள்ள பெண் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

இவ்வகையான துன்பங்களை முறையிடுவதற்கு அங்கு சிறிலங்காவுக்கான தூதுவர் எவரும் இல்லை எனவும் முறையிடுவதாயின் குவைத்துக்குச் செல்ல வேண்டும் எனவும் தெரிவிக்கும் அப்பெண் 70 ஆயிரம் பெண்கள் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாகவும் கூறுகிறார்.

# அனைத்து இடதுசாரிகளும் ஒன்றிணைந்து பலமுள்ள அரசமைக்க நடவடிக்கை

### -ம.ஐ.மு.கூறுகிறது

(கொழும்பு)

கொலைகார அரசியல் மீண்டும் தலைதூக்கியுள்ள இந்நேரத்தில், அனைத்து இடதுசாரிகளும் ஒன்றிணைந்து பலமுள்ள அரசொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ள வேளையில் "மக்கள் ஐக்கிய முன்னணியும்அதன்பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளதாக அக் கட்சியின் அனுராதபுர மாவட்ட அமைப்பாளர் பந்துல சப்ரகமுவ தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்சினை பற்றியும் கட்சியின் எதிர்காலத் திட்டங்களை விளக்குமுகமாகவும் தமது அங்கத்தவர்களுக்குளடுத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடும் போது, நாடு பொருளாதாரம், மதம், கலாச்சாரம் ஆகியவற்றுள் முன்னேற்றம் கண்டுள்ளது. உலகத்தைச் சுற்றித் திரிந்து மில்லியன் கணக்காகக் கொண்டு வருவதில் அர்த்தமில்லை. அதனால் மோசடிகளே நடைபெறுகின்றன. அவற்றின் மூலம் மனிதம் புதைபுண்டுகுண்டுக் கலாச்சாரம் மேலோங்குகின்றது. இத்தருணத்தில் கட்சி இன, மத பேதமின்றி அனைவரும் நாட்டுக்காக ஒன்று சேர வேண்டும். இல்லையேல் நாடு அழிவுக்குள்ளாகிவிடும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அரசின் யோசனையை ஆராய சனாதிபதி குழு அமைப்பு

(கொழும்பு)

அரசினால் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழுவொன்றைச் சனாதிபதி நியமித்துள்ளார்.

இக்குழுவில் ஏனைய உறுப்பினர்க[illegible] எதிர்க்கட்சித் தலைவர் ம[illegible]த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபால டி சில்வா, சூசை பிரேம்ஜெயந்த ஆகியோர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நிவாரணப் பொருள் அரசியல்வாதி வீட்டில்!

கடந்த காலங்களில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐக்கிய நாடுகளினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைக் கொண்ட பெட்டிகள் கினிகத் பிரதேச ஐதேக ஆதரவாளர் எனக் கருதப்படும் ஒருவரின் வீட்டுக்[illegible]களஞ்சியங்களில் எடுத்துச் [illegible]தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகத் தலவாக்கலைப் பிரதேசசபை உறுப்பினர் மாவட்டச் செயலருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# வவுனியா ஊடகவியலாளருக்கு இலவச ஆங்கிலப் பாடநெறி

(வவுனியா)

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு இலவச ஆங்கில பாடநெறி வகுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் அண்மையில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் ஜனாப் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களைச் சந்தித்துத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இதற்கமைவாகவே இவ் இலவச ஆங்கிலப் பாட வகுப்புக்களை நடத்த அரசாங்கத் தகவல் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வகுப்புக்கள் வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் நடத்தப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (10)

# தாயின் இறுதிச் சடங்கிற்கான பணத்தைத் திரட்ட குத்துச்சண்டையில் பங்கேற்ற வீரர் பரிதாப மரணம்

அமெரிக்காவின் யுடாவில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியின் முதல் சுற்றிலேயே எதிராளி விட்ட குத்தில் உயிரிழந்தார் பிரெட் ரோன் எனும் குத்துச்சண்டை வீரர்.

கடந்த வெள்ளிக்கிழமை யுடாவில் நடைபெற்ற ஆறு சுற்றுக்கள் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் பில்லி ஜும்பீரனை எதிர்த்து மோதினார் ரோன். ஆனால், முதல் சுற்று முடிய ஐந்து வினாடிகள் இருக்கும் போது ஜும்பீரனிடம் பலமான குத்தொன்றை வாங்கிய ரோன் அச்சுற்று முடிந்து 10 வினாடிகள் கழித்துக் கீழே சாய்ந்து விட்டார். உடனே அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் ரோன் இறந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

ரோன் மாரடைப்பினாலேயே இறந்திருப்பார் என யூகங்கள் நிலவுகின்றன. என்றாலும் எவ்வாறு இறந்தார் என்பதை உறுதி செய்யும் சோதனைக்காக உடல் சால்ட் லேக் சிட்டிக்குக் கொண்டு செல்லப் பட்டது.

கடந்த வாரம் இறந்த அவரது தாயின் உடல் அடக்கத்திற்காகப் பணம்திரட்டவேஇப்போட்டியில்ரோன் கலந்து கொண்டார் என அவரது நண்பர்கள் கூறியபோது குத்துச் சண்டை வீரர்கள், ரசிகர்கள் உட்பட அனைவருமே கண்கலங்கிவிட்டனர்.




# டெஸ்ட் தொடரை வெல்வோம்

### -நாசர் ஹுசைன்

தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்லத் தயாராக இருப்பதாக இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் நாசர் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஐந்து டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி இன்று எட்ஜ் பஸ்டனில் நடைபெறவுள்ளது.

இது குறித்து நாசர் ஹுசைன் மேலும் தெரிவிக்கையில், டெஸ்ட் தொடர் என்பது வித்தியாசமானதொன்றாகும். சமீபத்தில் ஒரு நாள் போட்டியில் எங்களிடம் தென்னாபிரிக்கா தோல்வியடைந்துள்ளது. இந்த நிலையைத் தொடர்ந்து நீடிக்க முனைவோம். ஆனால் தென்னாபிரிக்க அணியைச் சாதாரணமாக எடைபோட்டுவிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

# அங்குரார்ப்பணக் கூட்டம்

தமிழீழ விளையாட்டுத் துறையின் கிளி.மாவட்ட கபடிச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (சு)

# சதாம் ஹு"சைனின் இரு புதல்வர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

## அமெரிக்கப் படையதிகாரி கூறுகிறார்

ஈராக்கில் தலைமறைவாகியிருந்த சதாம் ஹு"சைனின் மகன்கள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப் படையதிகாரி கூறியுள்ளார்.

ஈராக்கில் நேற்று முன்தினம் அமெரிக்கத் துருப்பினருடன் நடந்த நான்கு மணிநேர சண்டையில் இவர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சதாம் ஹு"சைன் ஆட்சியில் முக்கிய பதவிகள் வகித்த பலரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொசூல் நகரில் இருந்த ஒரு வீட்டில் சதாம்ஹு"சைன் ஆட்சியில் பங்குவகித்த முக்கிய நபர்கள் பலர் பதுங்கி இருப்பதாக அமெரிக்க இராணுவத்திற்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலையடுத்து அந்த வீட்டைச்சுற்றி வளைத்து அமெரிக்கத்துருப்பினர் துப்பாக்கியாலும், பீரங்கியாலும் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து அந்த வீட்டில் பதுங்கியிருந்தவர்களும், அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர்.

சுமார் நான்கு மணிநேரம் நீடித்த துப்பாக்கிச் சண்டை முடிவில் அந்த வீட்டிலிருந்த 04 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். பின்னர் அந்த வீட்டிற்குள் புகுந்த இராணுவத்தினர் காயமடைந்திருந்தவர்களைக் கைதுசெய்ததுடன் உயிரிழந்தவர்களின் சடலங்களையும் கைப்பற்றினர்.

அவற்றில் சதாம்ஹு"சைனின் இரண்டு மகன்களான உதய், குவாஎபியின் சடலங்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கப்படையதிகாரி கூறியுள்ளார்.

சதாமின் ஆட்சியில் பணியாற்றிய நால்வர் இந்த இரு சடலங்களையும் அடையாளம் காட்டியிருப்பதாகவும் சடலங்களின் பற்களை ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்தில் ஹு"சைனின் அடையாளங்களை அவை 99 சதவீதம் ஒத்திருந்தன என்றும். உதயின் பற்கள் விபத்து ஒன்றில் சேதமடைந்ததால் 90 சதவீதமே அவை ஒத்திருந்தன என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் உதய் மீது கொலை முயற்சி ஒன்று முன்னர் மேற்கொள்ளப்பட்டபோது ஏற்பட்ட காயங்கள் எக்ஸ்ரே படங்கள் சடலத்தின் எக்ஸ்ரே படங்களுடன் ஒத்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சடலங்களின் ஒற்றுமைகள் ஐரோப்பிய மக்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்று ஈராக்கில் கடமையாற்றும் அமெரிக்க இராணுவ ஜெனரல் கூறியுள்ளார்.

இச் செய்தியை கேள்வியுற்ற புஷ் ஏற்புடையதும், தேவைப்படுவதுமான செய்தி இதுவாகுமென கூறியுள்ளார். அத்துடன் இவர்களது மரணம் மகிழ்ச்சியைத் தருவதாகவும், கொடூரமான தலைவர்களின் ஆதிக்கம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இருவரும் குற்றவியல் செயல்களின் தலைமையென அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் அமெரிக்கப்படை எங்கு சென்றாலும் வெற்றியடையாமல் மீள்வதில்லையென அவர் தெரிவித்ததாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

# கண்ணிவெடியில் காயமடைந்த யானை மரணமடைந்தது

(அலுவலக செய்தியாளர்)

அம்பகாமம் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து விட்டுச்சென்ற கண்ணிவெடியில் சிக்கி காயமடைந்த யானை ஒருவாரகாலத்தின் பின் உயிரிழந்துள்ளது.

கடந்த ஒருவாரகாலமாக காயமடைந்த நிலையில் இருந்த யானைக்கு சிகிச்சையளிப்பதற்காக தென்னிலங்கை சரணாலய மருத்துவர் குழு நேற்று வன்னி வரவிருந்தமை குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் இரவு மேற்படி காயமடைந்த யானை இறந்துள்ளது. (பா)

### செல்லக்கிளி...

பட்ட படையினர் மக்களையும், மாணவர்களையும் சுற்றிவளைத்ததுடன் நினைவுத் தூபியை தடிகள், தகரங்கள் கொண்டு மறைத்தார்கள். இதனால், கொதிப்படைந்த மக்கள் இவற்றை அகற்ற முற்பட்டவேளை, படையினரால் துப்பாக்கி முனையில் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

இதனையறிந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிக்கு விரைந்து குறிப்பிட்ட படையினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். இதன்போது படைத்தரப்பினர் இத்தூபி வீதி ஒழுங்கு விதிகளைப் பாதிப்பதுடன், சட்ட முரணானது எனவும் தமது செயலுக்கு நியாயம் கூறியதுடன் இது ஒரு அப்பட்டமான போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் எனவும் கூறினர்.

இதனைக் கேட்டு ஆத்திரம் கொண்ட மக்கள் வீதிக்கு அருகில் உள்ள காணிக்குள் அமைக்கப்பட்டிருக்கும் இந்தத்தூபி எந்த வகையில் வீதி ஒழுங்கைப் பாதிக்கிறது என்றும் இது எவ்வாறு போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் ஆகும் என்றும் கேள்வி எழுப்பினர். இச் செயற்பாடு போர்நிறுத்த மீறல் என்றால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எச்சரத்தில் இப்படியான விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கேள்வி எழுப்பினர். இச் செயற்பாடு தொடர்பாக படைத் தளபதி மௌனம் சாதித்ததைத் தொடர்ந்து படையினரே புதிய காவலரண்களை அமைத்து போக்குவரத்தைத் தடை செய்தும் வருகின்றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குச் சரியான நியாயம் கிடைக்க வேண்டும் என்று மக்கள் கேட்டதற்கு அமைய போர் நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினர் பலாலி இராணுவப் படைத்தளத்துடன் தொலைபேசி மூலம் அவ்விடத்திலிருந்தவாறே தொடர்பு கொண்டனர். இந்த நிலைமையை விளக்கி மக்களின் நியாயங்களையும் தெளிவு படுத்தினர். பின்பு பலாலிப் படைத்தளம் படையினரைப் பின்வாங்குமாறு கட்டளையிட்டது. இதனையடுத்து படையினர் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றனர்.

இக்கட்டளை கிடைத்ததை அறிந்த மக்கள் இராணுவத்தினரின் முன் நிலையிலேயே தகரங்களையும் தடிகளையும் தூக்கி எறிந்து தூபிக்கு முன்னால் தமது உணர்ச்சிக் கோசத்தை வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. (33)

### மாதகல்..

படையினர் தினமும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கடலுக்குக் கொண்டு செல்லப்படும் கடற்றொழிலாளர்களின் உடைமைகளும் கடுமையாகச் சோதிக்கப்படுகின்றது. நீரில் நனைந்த நிலையில் காணப்படும் கடற்றொழில் அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கும் மீனவர்களைப் படையினர் கடுமையாகப் பயமுறுத்தியும் வருகின்றனர்.

இப்பகுதிகளுக்கு சிங்களச் சுற்றுலாப் பயணிகள் தவிர்ந்த ஏனையோர் செல்லும்போது கடுமையான சோதனைக் கெடுபிடிகளையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.(33)

### திருநெல்வேலி...

ருந்தார்கள். இதனால் வழமையாக ஜனநடமாட்டம் கூடிய அப்பகுதி என்றுமில்லாதவாறு வெறிச் சோடிக் காணப்பட்டது. இவ்வாறான படை நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்துக் கூறிய ஈஸ்வரன் அரச நிர்வாகத்துடனோ அல்லது எந்த ஒரு அரசியலமைப்புக்களுடனோ சம்பந்தமில்லாது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறாது நமது தனிநாட்டை ஞாபகப்படுத்தியும், ஆவணப்படுத்தும் முகமாகவும் செய்யப்படும். இவ்வாறான நிகழ்வுகளில் படையினர் செய்கின்ற இந்த அடாவடித்தனங்கள் குறித்து வருந்தும் தெரிவித்த அவர் மாவீரர் செல்லக்கிளி அம்மானின் தூபியை தகரம் கொண்டு மறைத்த நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த கண்காணிப்புக் குழுவையும் கண்டித்துப் பேசினார். (33)



ஈராக்கில் மொசூல்பகுதியில் சதாம் ஹு"சைனின் புதல்வர்கள் இருந்ததாகக்கூறி அமெரிக்கப்படையினர் தாக்குதல் நடத்திய வீடு

# ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்பு சிறப்புற நடைபெற்ற அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

கருணாகரனின் ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்பு நூலின் அறிமுக விழாவும் விமர்சன அரங்கும் கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்று மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் எழுத்தாளர் நிலாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையினை கிளி. அழகியல் கலா மன்றத்தின் தலைவர் விஜயசேகரன் நிகழ்த்தினார். அடுத்து ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்பு நூல் வெளியிடப்பட்டது.

மேற்படி நூல் பற்றிய விமர்சன உரையினை புலிகளின் குரல் பிரதம செய்தியாசிரியர் தி.தவபாலன், எழுத்தாளர் விவேக் ஆகியோர் நிகழ்த்தினர் தொடர்ந்து சபையோர் கருத்துரை நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் மற்றும் எழுத்தாளர்கள், ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (பா)

# இலங்கையரான ஐ.சி.ஆர்.சி. உதவி ஊழியர் ஈராக்கில் பலி!

ஈராக்கில் தலைநகர் பாக்தாத்திற்குத் தெற்கே நடந்த தாக்குதல் ஒன்றில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவி ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதோடு மற்று மொருவர் காயமடைந்துள்ளார்.

இந்த இருவரும் பயணம் செய்துகொண்டிருந்த வாகனம் கில்லா நகரிற்கண்மையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியது. இதன் போதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டும் மற்றொருவர் காயமடைந்துமுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கூறியுள்ளார்.

கொல்லப்பட்டவர் சிறிலங்காவைச் சேர்ந்த சிறிரண்முத்து என்றும் செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

### லெப்.செல்லக்கிளி...

சிவராசா, தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதி சுதன் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

நிகழ்வில் பெருமளவான மாணவர்களும், மக்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள். (33)

### புலிகள்...

மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் புதிய போராளிகளாக இணைந்தவர்களில் பதினாறு வயதிற்குட்பட்ட 80 பேர் மீண்டும் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டார்கள்.

வயது குறைந்தவர்களாகவும் பாடசாலை மாணவர்களாகவும் இருந்த இவர்களே மீண்டும் தமது கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காக அவர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் திருப்பி பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் எழிலன் அவர்கள் தெரிவித்துள்ளார். (10)

### இராணுவ..

இதனால் மீனவர்கள் சிறந்த சந்தை வாய்ப்பைப் பெறமுடியாதுள்ளனர்.

இவை அனுமதிக்கமுடியாதவையாகும். இவற்றை நிவர்த்திக்க அரசின் உயர்மட்டங்களுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்குமாறு போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரை சமாசம் கேட்டுக் கொண்டுள்ளது.

### புகையிரதத்தில்...

தொடருந்தைசெலுத்திய வேளையிலேயே இந்த விபத்து நடைபெற்றுள்ளது. இவ்விபத்து தொடர்பாக கல்கிஸ்ஸை பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நாட்டின்..

நாட்டின் சகல பிரதான பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என அமைச்சர் ஜீல் பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

### நோர்வேயிடமே..

ஆராகச் செயற்படும் நோர்வே அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு மாத்திரம் சிறிலங்கா அரசாங்கம் தனது கருத்துக்களை அனுப்பி வைத்துள்ள அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது கருத்துக்களை நோர்வே பிரதிநிதிகளுக்கு மாத்திரம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருதுக்கள் எந்தவிதக் கடிதங்கள் மூலமும் குறிப்பிடப்படவில்லை. இரு சாராரும் யோசனைகளை முன் வைத்த பின்னர் அரசாங்கம் அது பற்றி எதிர்க்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளது என்றும் அந்த உத்தியோகத்தர் மேலும் கூறியுள்ளார்.


# மேற்பார்வையாளர் பணிக்கான நேர்முகத்தேர்வு



தமிழீழ போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக மேற்பார்வையாளர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 26. 07.2003, 27.07.2003ஆம் நாள் சனி,ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணிவரை தமிழீழப் போக்குவரவுக்கழகம் – பேருந்துப்பகுதி புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8440)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் வருடம் ஜூலை மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்...